O.S.No.10/2020

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 30.09.2024

PW1:கணேசமூர்த்தி த/பெ– ராமசாமி

<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

தாவா வழக்கில் நான் எனக்காக மட்டும் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். பிராதில் தாவா சொத்து ஆதியில் சீனிநாயக்கர் குமாரர்கள் அழகர்சாமி மற்றும் குருசாமி ஆகியோர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தினை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்துள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் பிராது தபசில் கண்ட சொத்தானது ஆதியில் செல்லையா நாயக்கர், சீனி நாயக்கர், அழகர்சாமி நாயக்கர் மகன் குருசாமி நாயக்கர் ஆகியோர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பிராதிற்கும், நிரூபண வாக்குமூலத்திற்கும் தாவா சொத்து யாருக்கு பாத்தியம் என்பதில் முரண்பாடு உள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து சீனிநாயக்கர், அழகர்சாமி நாயக்கருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சீனிநாயக்கருக்கும், குருசாமி நாயக்கரும் தபசில் சொத்தை தனிப்பட்ட சொத்தாக அனுபவித்து வந்தார்கள் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல்செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி சீனிநாயக்கருக்கும், குருசாமி நாயக்கருக்கும் தாவா சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை என்பதால் அதற்கான ஆவணங்கள் தாக்கல்செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் தனித்து

அனுபவித்து வருகிறார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 07.10.1985 ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் மூலம் 1 முதல் 4 வாதிகளின் தகப்பனார் ராமசாமி நாயக்கருக்கு சீனி நாயக்கரும், குருசாமி நாயக்கரும் கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்று சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. ராமசாமி நாயக்கர் கிரையம் வாங்கி பின்பு அவர் தான் தனித்து அனுபவம் செய்துவந்தார் என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ராமசாமி நாயக்கரின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.1 ல் உள்ள முத்திரைதாள்கள் வெவ்வேறு தேதிகளில் வெவ்வேறு நபர்களிடம் இருந்து வாங்கப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 க்கும், 1 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ராமசாமி நாயக்கர் இறப்பதற்கு முன்பு தாவா சொத்தில் விவசாயம் செய்து வந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான், என்னிடம் கேட்காததால் தரவில்லை. ராமசாமி நாயக்கர் இறந்ததற்கு பின்பு நானும், மற்ற வாதிகளும் கூட்டாக அனுபவம்செய்து வருவதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான், கேட்காததால் தரவில்லை. எங்களது அனுபவத்தில் சொத்துக்கள் இல்லை என்றும், வழக்கிற்காக இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் விவாசயம் செய்து வருவதை 1 ம் பிரதிவாதி எந்த தேதியில் தடுத்தார் என்பதை பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் விவசாயம் செய்யவில்லை என்றும், 1 ம் பிரதிவாதி தடுக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக

சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி வாதிகளிடம், 1ம் பிரதிவாதி இடையூறு செய்தது குறித்து ஊர் பெரியவர்களிடம் எந்த தேதியில் யார் யார் முன்னிலையில் பேசினோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அப்படி ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றும், வழக்கிற்க்காக அவ்வாறு சொல்லியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் ஊர்பெரியவர்களிடம் கிரைய பத்திரத்தை காண்பிக்கவில்லை என்றும், காண்பித்ததாக வழக்கிற்க்காக சொல்லியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பேசி போது 1ம் பிரதிவாதி கிரைய பத்திரத்தை ரத்து செய்து விடுவதாக கூறினார் என்று வழக்கிற்க்காக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என்னை எப்போதும் பார்த்ததில்லை என்றால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதியை எந்த தேதியில், எங்கு வைத்து பத்திரத்தை ரத்து செய்ய கேட்டேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ எந்த தேதியில் வில்லங்கம் போட்டு பார்த்தேன் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான், வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் பட்டா மாற்றம் 2018ல் தான் எனக்கு தெரியவந்தது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நானும், 2 முதல் 9 வாதிகளும் பட்டாவை ரத்து செய்யக்கோரி வட்டாட்சியரிடம் மனு கொடுததுள்ளோம் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் சொன்னால் சரியல்ல. 2018ல் நான் வட்டாட்சியரிடம் மனு கொடுத்து நடவடிக்கை எடுக்கவில்லை என்பது சம்மந்தமாக நான் மேல்நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தை நான் மட்டும் தான் வட்டாட்சியருக்கு கொடுத்ததாக உள்ளது

என்று சொன்னால் சரிதான். வட்டாட்சியரிடம் கொடுக்கப்பட்டது என்பதற்கான குறிப்புகள் வா.சா.ஆ.2ல் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணமானது வழக்கிற்காக, வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் என்னால் எழுதப்பட்டு, உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2ல் பட்டா எண் குறிப்பிடவில்லை என்று சொன்னால் எங்கள் பெயரில் பட்டா இல்லாததால் சர்வே எண் குறிப்பிட்டுள்ளேன். எனது பெயரில் சொத்து இல்லை என்றும், அதனால் தான் பட்டா எண் குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நானும், மற்ற வாதிகளும் வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பட்டா தற்போது வரை 1ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் முதலில் இருந்த பட்டாதாரர் பெயருக்கு மாறியுள்ளது. அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு பட்டா மாறுதல் ஆகவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரைய பத்திரம் செல்லாது என்று சார்பதிவாளரிடம் எந்த தேதியில்சென்று சொன்னோம் என்று வாதிகள் நிரூபண வாக்குமூலத்திலோ, பிராதிலோ சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அவ்வாறு சார்பதிவாளர் அலுவலகம் சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சென்று மீண்டும் பட்டாவை ரத்து செய்ய எந்த தேதியில் பேசியதாகவும் அதற்கு 1ம் பிரதிவாதி ரத்து செய்து தரமுடியாது என்று கூறியதாகவும் சொன்னதை எந்த தேதியில் எங்கு வைத்து பேசினோம் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த மாதிரி எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

(1ம் பிரவாதி தரப்பு வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)